**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2024 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18 ஆம் நாள் வியாழக்கிழமை

**இ.ம.எண்.05/2023 இன் அ.வ.எண்.435/2015**

கோவை மாவட்டம், முன்பு பொள்ளாச்சி தற்பொழுது ஆனைமலை தாலூக்கா, நெல்லுக்குத்திபாறை, புதுவிநாயகர் கோவில் வீதி, கதவு எண்.76 ல் வசிக்கும் திரு.ராஜேந்திரன் மனைவி இந்து சுமார் 55 வயதுடைய திருமதி.வேல்விழி. ... மனுதாரர்/ வாதி

/ எதிர் /

1) முன்பு பொள்ளாச்சி தற்பொழுது ஆனைமலை தாலூக்கா, நெல்லுக்குத்திப்பாறை, ராமநாதன் நகர், கிருஷ்ணா கோவில் வீதி என்ற முகவரியில் வசிக்கும் சுமார் 45 வயதுடைய லேட்.சாந்துமுகம்மது மனைவியும், திரு.அப்துல் வகாப் மகளுமான திருமதி.சுபைதாபீபி.

2) முன்பு பொள்ளாச்சி தற்பொழுது ஆனைமலை தாலூக்கா, நெல்லுக்குத்திப்பாறை, ராமநாதன் நகர், கிருஷ்ணா கோவில் வீதி என்ற முகவரியில் வசிக்கும் சுமார் 70 வயதுடைய திரு.அப்துல் வகாப் மனைவி திருமதி.பாத்திமாபீபி.

3) முன்பு பொள்ளாச்சி தற்பொழுது ஆனைமலை தாலூக்கா, நெல்லுக்குத்திப்பாறை, ராமநாதன் நகர், கிருஷ்ணா கோவில் வீதி என்ற முகவரியில் வசிக்கும் சுமார் 27 வயதுடைய திரு.சாந்துமுகம்மது மகள் Ms.சபீனாபேகம். ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

4) சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், ஆனைமலை

... கட்சிசேர்க்கப்பட வேண்டிய நபர்

4ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினரை அசல் வழக்கில் பிரதிவாதியாக கட்சி சேர்க்க உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10 (2)ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 25.09.2023.

இம்மனுவானது கடந்த 10.04.2024 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.ரங்கராஜன், அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.மீரான் மொய்தீன் அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பாலசுப்பிரமணியம், அவர்கள் ஆஜராகியும், 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.S.தேவசேனாதிபதி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித எதிருரையும் தாக்கல் செய்யாமலும், மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

## இறுதி உத்தரவு

முடிவில், இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு, நேரிய வழக்கு விசாரணைக்கு 4ம் எதிர்மனுதாரர் தேவையான தரப்பினர் என்பதால் அவரை அசல் வழக்கில் 4ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்க உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு 2024ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18ஆம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**(ஒப்பம்)/- N. பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---

**இறுதிநிலை உத்தரவு**
இ.ம.எண்.05/2023 இன் அ.வ.எண்.435/2015
நாள் : 18.04.2024
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

---